# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.53/2023 | Date | : | 02.09.2024 |
| Deposition of Witness for | : | அ.சா.4 | Taluk | : | எடப்பாடி |
| Name | : | பெருமாள் | Calling | : | விவசாயம் |
| Father / Husband Name | : | | Religion | : | இந்து |
| Village | : | வெள்ளரிவெள்ளி | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.09.2024.
(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் எடப்பாடி தாலுகா, வெள்ளரி வெள்ளி அஞ்சல், சென்டங்காடு என்ற முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என் மாமா சுப்பிரமணி குடும்பத்திற்கும் ஆஜர் எதிரி சின்னதுரை குடும்பத்திற்கும் இடையே தடம் பிரச்சனை இருந்து வந்தது. சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பாக சின்னதுரை அந்த தடத்தை நிறவினார். அதற்கு என்னுடைய மாமா ஏன் என்னுடைய தடத்தை நிறவுகிறீர்கள் என்று கேட்டார். பின்னர் மறுநாள் என்னுடைய மாமா வெண்டைக்காய் பறித்துக் கொண்டிருந்தபோது சின்னதுரை டிராக்டர் ஒட்டிக்கொண்டு வந்து என் மாமாவின் மீது மோதி இனிமேல் தடம் சம்பந்தமாக பேசினால் டிராக்டர் ஏற்றி கொன்று விடுவதாக மிரட்டியதாக கேள்விப்பட்டேன்.

2) பின்னர் மறுநாள் காலை சுமார் 07.00 மணியளவில் போலீசார் அங்கு வந்தார்கள். பிரச்சனை ஏற்பட்ட இடம் எது என்று விசாரித்தார்கள். நானும் அருகில் இருந்தவர்களும் பிரச்சனை ஏற்பட்ட இடத்தை காண்பித்தோம். போலீசார் அந்த

இடத்தில் வரைபடம் ஒன்று வரைந்து மகஜர் ஒன்று தயார் செய்தார்கள். அதில் நானும் அண்ணாமலை என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது சாட்சி கையொப்பம் அண்ணாமலை என்பவருடையதாகும். (**பார்வை மகஜர் அ.சா.ஆ-2-ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் குடியிருக்கும் இடத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே சுமார் 02 கிலோ மீட்டர் இருக்குமென்றால் இல்லை அரை கிலோமீட்டர் இருக்கும். பிரச்சினை ஏற்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கும் என் மாமா சுப்பிரமணி குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கிலோமீட்டர் இருக்கும். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதால் எந்த இடத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

2) நானும் அண்ணாமலையும் காவல் நிலையத்தில் வைத்து மேற்படி கையொப்பத்தை செய்துவிட்டு சுப்பிரமணி எனது மாமா என்பதால் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாள் சரியல்ல. தேவூர் காவல் நிலையத்தில் பணியாற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சண்முகநாதன் என்பவர் எனது மாமா சுப்பிரமணியன் சம்மந்தி என்றால் சரிதான். மேற்படி சண்முகநாதன் அங்கு வந்தாரா என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில்

சொன்ன இடத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும் என் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-S.R.Babu,

Sd/-Perumal

Judicial Magistrate No.1,

Sankari.